பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

Time Reader
Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை (10-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 320

# மட்டக்களப்பில் புலிகள் திடீர் தாக்கு!

# விசேட அதிரடி படையினர் 9 பேர் பலி!

## பவள் கவச வாகனமும் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை 7-45 மணியளவில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படை அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் அதிரடிப் படையினர் ஒன்பது பேர் உயிரிழந்தனர்; ஏழு பேர் காயமுற்றனர்; பவள்கவச வாகனம் ஒன்றையும் புலிகள் தகர்த்து அழித்தனர்.

மட்டக்களப்பில் 19 ஆம் கட்டை விசேட அதிரடிப் படை முகாமில் இருந்து 36 ஆம் கொலனி நோக்கி ரோந்து சென்றுகொண்டிருந்த படையினர் மீது இந்த 15 நிமிடநேர அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டதாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## போலியோ தடுப்பு தினமான

## நவம்பர் 4 ஆம் திகதி

## ஒரு நாள் போர் நிறுத்தம்?

யாழ்ப்பாணம், ஒக். 10

தேசிய போலியோ தடுப்பு தினங்களில் ஒன்றான நவம்பர் நான்காம் திகதி வடக்கு — கிழக்கில் போர் நிறுத்தம் செய்யுமாறு அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போலியோவை (இளம்பிள்ளை வாதத்தை) இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னதாக ஒழிக்கும் சர்வதேச றோட்டறிக் கழகத்தின் திட்டத்தின் கீழ் —

இலங்கையில் ஐந்து வயதுக்குக் குறைந்த சகல குழந்தைகளுக்கும் வாய்மூல தடுப்பு மருந்து கொடுப்பதற்காக —

நவம்பர் 4 ஆம் திகதியும் டிசம்பர் 9 ஆம் திகதியும் தேசிய போலியோ தடுப்பு தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## காணமல் போன பத்து மீனவரில்

## 2 பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர்

### ஒருவரைக் காணவில்லை; 7பேர் கரை சேர்ந்தனர்

குருநகர், ஒக். 10

கடந்த சனியன்று குருநகரிலிருந்து பூநகரி— கல்முனைப் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்று பின்னர் காணாமல் போன பத்து மீனவர்களில் இருவரின் சடலங்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் குருநகர்ப் பக்கமாக கரை ஒதுங்கின. இந்த இருவருடன் ஒரே படகில் சென்ற மற்றொருவர் பற்றித் தகவல் ஏதும் கிடைக்கவில்லை ஏனைய ஏழுபேரும் கரை சேர்ந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன

நேற்று கரை ஒதுங்கிய இருவரினதும் சடலங்களில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## மாலதி நினைவு நாளும்

## பெண்கள் எழுச்சி தினமும்

### இன்று உணர்வுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முதல் முதலில் வீரச்சாவடைந்த பெண் போராளி இரண்டாம் லெப்டினன்ட் மாலதியின் (பேதுருப்பிள்ளை சகாயசீலி) நினைவு தினமும்—

தமிழீழ பெண்கள் எழுச்சி தினமும் இன்று தமிழீழம் எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1987 ஆம் ஆண்டு இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் 2 ஆம் லெப்டினன்ட் மாலதி கோப்பாயில் வீரச்சாவடைந்தார்.

அவரது நினைவு தினமான இன்று தமிழீழ பெண்கள்

[( 7 ஆம் பக்கம் பார்க்க)]

# யாழ். உணவு விவகாரம்

# ராணுவ செல்வாக்கினுள்!

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு உணவு அனுப்பும் விடயம் இப்போது இராணுவத்தின் செல்வாக்குக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

அத்தியாவசிய சேவை ஆணையாளர் நாயகம் எம். என். ஜுனைத் யாழ்ப்பாண உணவு நிலை சம்பந்தமாகத் தயாரித்து வெளியிட்ட அறிக்கை —

அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தைச சேர்ந்த இராணுவத்துக்கு ஆதரவான அதிகாரிகளின் தூண்டுதலின் பேரிலேயே தயாரிக்கப்பட்டதாக —

பிரஸ்தாப திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளில் பலரும் கருதுகின்றார்கள்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிக்கை ஜனாதிபதி சந்திரிகாவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அந்த அறிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-3)

## தெற்கில் எட்டு இடங்களில்

## கடற்படைக்கு ஆட்சேர்ப்பு!

### வியாழனன்று நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஒக். 10

ஸ்ரீலங்கா கடற்படைக்கு புதிதாக ஆட்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் வியாழக்கிழமை எட்டு இடங்களில் நடைபெறவுள்ளன.

வெலிசறை, திருகோணமலை, காலி, தங்கல்ல ஆகிய கடற்படை முகாம்களிலும்—

பத்தரமுல்லையில் உள்ள கடற்படை விடுமுறை விடுதியிலும்—

அம்பாறை, மின்னேரியா, அனுராதபுரம் இராணுவ முகாம்களிலும் இந்த நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறும்— என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## தணிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 10

அரசு அமுல் செய்து வரும் செய்தித் தணிக்கையைக் கண்டித்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கொழும்பில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள பத்திரிகைகளில்

## யாழ். உணவு நிலைவரம்!

கொழும்பு. ஒக் 10

யாழ். குடாநாட்டில் உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக நேற்றைய சிங்களப் பத்திரிகை செய்திகள் வெளியிட்டன

திவயின, லங்காதீப ஆகிய பத்திரிகைகளே யாழ் உணவுத் தட்டுப்பாடு குறித்து செய்தி வெளியிட்டிருந்தன.

அந்தச் செய்திகளை புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் மறுத்துள்ளதுடன் — யுத்தம் நடைபெறும் பகுதிகளில் உணவு நிலைமையைச் சீராக்கும் பணியை மாவட்ட அரச அதிபர்களும், பிரதேச செயலர்களும் மேற்கொள்ள வேண்டும் என்றும் — அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

## மட்டக்களப்பில் படகு கவிழ்ந்து 10 பேர் பலி!

மட்டக்களப்பு, ஒக். 10

மட்டக்களப்பில் பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள காஞ்சிரன் குடா வாவியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 10 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் படுகிறது. (ஐ)

## புத்தூரில் 9 வயோதிபர்கள் மரணம்?

கொழும்பு, ஒக். 10

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் புத்தூர் மெதடிஸ்த தேவாலயம், புத்தூர் ஆஸ்பத்திரி மற்றும் வயோதிபர் இல்லப் பகுதிகளில் விழுந்து வெடித்த ஷெல்களினால் [illegible] இருந்த 91 வயோதிபர்களில்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சிமெந்தும் தாரும் உணவுப் பொருள்களாம்!

### கொழும்பு அதிகாரி கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

சிமெந்து, தார், மண்ணெண்ணெய், டீசல் இவை எல்லாம் என்ன வகைப் பொருள்கள்?

இதில் என்ன சந்தேகம் உணவுப் பொருள்களே அவை!

ஆச்சரியமாக இருக்கிறதா?

அத்தியாவசிய சேவைகள் நாயகம் இவற்றை உணவுப் பொருள்களாக இனங்காட்டியே யாழ் மாவட்டத்துக்கு அனுப்பிய உணவுப் பொருள்கள் பற்றிய அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்.

கடந்த ஒன்பதுமாதங்களில் குடாநாட்டுக்கு 33 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை அனுப்பியதாகவும் — அதனால் குடாநாட்டில் உணவுக் குத் தட்டுப்பாடு இல்லை என்றும் அவர் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையுடன் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பில் உணவுப் பொருள்களின் அளவு அட்டவணைப்

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எஸ்-எம்-பெர்ஜன்டோ

ஆதரவில்

யாழ். மிட் - ரவுண்
றோட்டறக்ற் கழகம்
நடத்தும்

ஆறு பேர் ஐந்து ஓவர் கொண்ட
மிட் – ரவுண் கேடயத்திற்கான
தோற் பந்து
## கிரிக்கற் சுற்றுப் போட்டி

அனேக கழகங்கள் பங்குபற்றுவதால் சுற்றுப் போட்டி 13 - 10 - 1995 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து 14 ஆம் 15 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

செயற்திட்ட இயக்குநர்.

(இ– 2446)

# கேள்வி விற்பனை

யாழ். பல்கலைக்கழக கணனி அலகில் [Computer Unit] பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டியும் அதனுடன் சேர்ந்த டக் அலகும் (Air Conditioner and Duck Unit) கொள்வனவு செய்ய விரும்புவோர், பொறியிடப்பட்ட கூறு விலைகளை எதிர்வரும் 16-10-1995 காலை 10-30 மணிக்கு முன்னதாக நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரியிட்டு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் UJ / Auction / 16 – 10 – 95 என்று குறிக்கப்பட வேண்டும்.

மேற்படி கூறுவிலைகள் 16-10-95 காலை 11-30 மணிக்கு திறக்கப்படும்.

பல்கலைக்கழக கணனி அலகில் 12 ஆம், 13 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை பார்வையிடலாம்.

மேற்படி விபரங்கள் ஏதும் தேவைப்படின் நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் ஆகியோருடன் அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

– பதிவாளர்

(இ-2447)

## கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலகத்தை சேர்ந்த கிராம சேவையாளர் திரு. J. N P. பாக்கியராஜா அவர்களின் தந்தையார்

### அமரர் J. N. பொன்னையா

அவர்களின் மறைவையிட்டு மனங்கலங்கி நிற்கும் அவர்களின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரி சங்கம்
யாழ். பிரதேச செயலகம். (38936)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாசமிகு கிராமசேவை உத்தியோகஸ்தர் திரு. J. N. P. பாக்கியராஜா அவர்களின் தந்தையாரும், திருநெல்வேலி செல்வதி பாலர் பாடசாலை ஸ்தாபகருமான

### அமரர் யோண்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை பொன்னையா

அவர்களின் மறைவினால் அவருந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பாஷையூர் J/65
வாழ் மக்கள்
(இ/2440)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஒக். 10

வலிகாமம் பகுதியிலுள்ள விறகு காலை, அரிவு காலை உரிமையாளர்களுக்கான இளைச் சங்கம் அமைப்பதற்கான ஒன்று கூடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு திருநெல்வேலி விவசாயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல்பாதுகாப்புப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இளைச்சங்கம் அமைக்கப்படவுள்ளதாகவும் இதில் வலிகாமம் பகுதியில் அமைந்துள்ள அனைத்து விறகு காலை, அரிவு காலை உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 10

நல்லூர் ப. நோ. கூ. சங்க காரியாலயத்தில் எதிர்வரும் வெள்ளியன்று காலை 9 மணிக்கு "கீதை உணர்த்தும் கடமை" என்ற தலைப்பில் சுவாமி சித்ருபானந்த மகராஜ் உரையாற்றுவார். (ஐ)

## ஆசிரியர் பயிற்சி நேர்முக பரீட்சை அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், ஒக். 10

இம் மாதம் 21ஆம் திகதி வவுனியாவில் அமைந்துள்ள கல்விக் காரியாலயத்தில் ஆசிரியர் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற உள்ளது.

கீழ்க் குறிப்பிட்டுள்ளவர்களின் அனுமதி அட்டைகள் தமது அலுவலகத்தில் இருப்பதாகவும் —

அடையாள அட்டையைக் காண்பித்து அவற்றை உடனடியாக எடுத்துச் செல்லுமாறும் கோப்பாய் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

அவர்கள் விபரம் வருமாறு;

என். பஞ்சலிங்கம், கே. இளங்கோசன், செல்வி ரி. மதிமோகனா, ஜே. ஞானசரஸ்வதி, ஜே. கோபாலகிருஷ்ணன், செல்வி எம். ராஜினி, பி சுந்தரராஜா, திரு. எஸ். சுதாஸ், திரு. என். குமரசிறி (இ)

## பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட முடிவு செய்துள்ளனர்.

சித்த மருத்துவத்துறையின் தலைவராக இருந்த வைத்திய கலாநிதி சு பவானி அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டதை ஆட்சேபித்து கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்தனர்.

முன்னாள் துறைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கிய தற்கான காரணத்தைத் தெரிவிக்கக் கோரி தாம் பகிஷ்கரிப்பை நடத்திய போதிலும் —

பல்கலைக்கழக நிர்வாகம் காரணத்தைத் தெரிவிக்கவில்லை என்றும் —

இதனைத் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் —

முன்னாள் துறைத் தலைவரின் வேண்டுகோளை ஏற்றே இன்று பத்தாம் திகதி தொடக்கம் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு விரிவுரைகளுக்கு சமுகமளிக்க முடிவு செய்ததாகவும் — சித்த மருத்துவ [illegible] அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

# பாதுகாப்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாளை முதல் தேசிய பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படவுள்ளது.

உரும்பிராய் அன்னை பூபதி கலையரங்கில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணி முதல் 5 மணிவரை —

ஏழாலை ஜே–201, ஜே–202, ஜே– 203, ஜே– 204, ஜே– 205, ஜே– 206 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படும். (ஐ)

வலி. கிழக்கு வடபகுதி
ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி

# ஒய்வூதியம் வழங்கல்

எமது சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோர் இன்று [10-10-1995] காலை 9-00 மணிக்கு தற்காலிகமாக இயங்கும் எமது தலைமைக் காரியாலயத்தில் தத்தமது ஒய்வூதியத்தை கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

1. ஒய்வூதிய அறிமுக அட்டை
2. தேசிய அடையாள அட்டை
3. கிராமிய வங்கி பாஸ் புத்தகம்
4. ஒரு ரூபா முத்திரை

எமது தற்காலிக முகவரி:-

அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம்,
சாவகச்சேரி பிரதேச சபை
உப அலுவலகம்,
சரசாலை.
[கனகம்புளியடிச் சந்தி]

(சி/2443)

# இந்து மத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்

# புதிய நிர்வாகம்

கடந்த 20-9-95 அன்று வண்ணை வைத்தீஸ்வராக்கல்லூரியில் நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்;-
சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள் (சுதுமலை)

செயலாளர்:-
பிரம்மஸ்ரீ சாம், சோமாஸ்கந்த சர்மா [நல்லூர்]

பொருளாளர்;-
சிவஸ்ரீ க. மகாகணபதீஸ்வரக்குருக்கள் (வண்ணை)

உபதலைவர்;-
சிவஸ்ரீ சிவ. நித்யானந்தக்குருக்கள் (சங்கானை)

உபசெயலாளர்:-
பிரம்மஸ்ரீ க. சந்திரசேகரசர்மா [கோப்பாய்]

உறுப்பினர்கள்.

சிவஸ்ரீ சாம். ஜெகதீஸ்வரக்குருக்கள் [நாயன்மார்கட்டு]
பிரம்மஸ்ரீ பா. நகுலேஸ்வரசர்மா [நீராவியடி]
பிரம்மஸ்ரீ க. தாமோதரஐயர் [நீராவியடி]
சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக்குருக்கள் (நீராவியடி)
பிரம்மஸ்ரீ வை. வெங்கடாசல ஐயர் [கொக்குவில்]
பிரம்மஸ்ரீ க. கமலநாதசர்மா (புங்குடுதீவு)
சிவஸ்ரீ செ. பரமானந்தக்குருக்கள் [கல்வயல்]
பிரம்மஸ்ரீ வி. சண்முகநாதசர்மா [மட்டுவில்]
சிவஸ்ரீ அ. அப்பாச்சாமிக்குருக்கள் [கரவெட்டி]
சிவஸ்ரீ இ. சபேசக்குருக்கள் [புலோலி]

புதிய அலுவலகம்:-
No. 10, சித்திவிநாயகர் கோவில், பழம் றோட்,
கந்தர்மடம்.

✶ குறிப்பு:

குருமார் ஒன்றியத்துடனான சகல தொடர்புகளையும் மேற்படி விலாசத்தில் உள்ள அலுவலகத்தில் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

★ அலுவலக நேரம்:- வெள்ளி, செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9--11 மணி வரை "கை குலுக்கல்" "இடி முழக்கம்" ஆகிய இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த குருமார்கள் தங்கள் பெயர் முகவரிகளை குருமார் ஒன்றியத்தில் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

— இங்ஙனம்

பிரம்மஸ்ரீ சாம். சோமாஸ்கந்த சர்மா
செயலாளர்

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்
தலைவர்

(38938)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5,000 தமிழ் ஆசிரியரை நியமிப்பதற்கு முடிவு

## அடுத்த வாரம் விண்ணப்பம்

5 ஆயிரம் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு அடுத்த வாரம் விண்ணப்பங்கள் கோரப்படும் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சார்ட் பத்திரண தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் 8 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றில் 5 ஆயிரம் வெற்றிடங்களுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 10,000 குடும்பங்கள் வரை கோப்பாயில் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஒக் 10

இம் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இடிமுழக்க இராணுவ நடவடிக்கையின் போது கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் இருந்து 10,000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து வலிகாமத்தில் நல்லூர், கோப்பாய் பிரதேசச் செயலர் பிரிவிலும் —

தென்மராட்சியில் சாவகச்சேரி பிரதேசசெயலர் பிரிவிலும் —

வடமராட்சியில் கரவெட்டி பிரதேசச் செயலர் பிரிவிலும், பாடசாலைகளிலும், பொது இடங்களிலும், ஆலயங்களிலும் தங்கி உள்ளனர். இவர்களைப் பராமரிப்பதில் பிரதேச செயலகமும், அரசசார்பற்ற நிறுவனங்களும், அரச நிர்வாக அமைப்புகளும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து அறவழிப்போராட்டக்குழு, வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், வர்த்தகர்சங்கம், வெதுப்பக உரிமையாளர் சங்கம், பொதுமக்கள் அமைப்பு என்பன சேவையாற்றிவருகின்றன என்று தமிழர் புனர்வாழ்வுப் பிரிவு தெரிவிக்கிறது. (இ)

# மலசல கூடத்துக்குச் செல்லவும் படையினர் அனுமதி பெற வேண்டும்

## இராணுவப் பிடியிலிருந்து வந்தவர் தகவல்

நாவற்குழி, ஒக் 10

இராணுவப் பிடிக்குள் சிக்கும் மக்களை ஒன்றாக — ஒரே இடத்தில் இருக்கும்படி — படையினர் உத்தரவிடுகின்றனர். அங்கிருப்போர் மலசலம் கழிக்கச் செல்வதானாலும் அவர்களின் அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும்.

ஆவரங்காலில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் சிக்குண்டு கடந்த ஞாயிறு அங்கிருந்து மீண்டு வந்த ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்கூறியதாவது:

புலிகளின் பிடியிலிருந்து நீங்கள் வந்துள்ளீர்கள் உங்களுக்கு நாம் எல்லா வசதிகளையும் செய்து தருவோம் என முதலில் இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார்.

ஆனால் அவர்கள் பொது இடமொன்றில் எம்மைச் சிறைக் கூடத்தில் வைத்திருப்பது போலவே நடத்தினர்.

நான் வெளியே செல்லப் போவதாகக் கூறிய போது பலவிதமான தடைகளைச் சொல்லி வந்தனர். செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தான் விடமுடியும் பலாலி போய் பின் கப்பலில் போகலாம் எனவும் கூறினர்.

நான் கிழக்குத் திசையைக் காட்டி அப்படிப் போய்ப் போவேன் — என்னை விட்டு விடுங்கள்'' எனக் கேட்டேன் அதைத் தொடர்ந்து பல இராணுவ அதிகாரிகள் முன் விசாரிக்கப்பட்டேன். பின்னர் என்னுடன் வேறும் சிலரை ஓர் இராணுவச் சிப்பாயுடன் சேர்த்து அனுப்பினர் குறித்த எல்லை வரை அந்தச் சிப்பாய் எம்மைக் கூட்டி வந்து போகவிட்டார்.

நாம் அங்கிருந்து நடந்து வந்து — புலிகளின் எல்லைக்கு வந்து சேர்ந்தோம் அங்கு போராளிகள் எம்மைக் அன்புடன் வரவேற்று போக வேண்டிய இடம் செல்ல வசதி செய்து தந்தனர் என்றார்.

## ஐ. நாவில் இலங்கைப் பிரதிநிதி;

# புலிகளுக்கு உள்ள சர்வதேச ஆதரவு குறித்து பிரஸ்தாபம்

கொழும்பு, ஒக். 10

பயங்கரவாதத்துக்கு உதவ வேண்டாம் என்று ஐ நா சபையின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி எச். எல். டி சில்வா உலக நாடுகளைக் கேட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கும் ஐ. நா. சட்டக் குழு முன்னிலையில் உரையாற்றிய அவர் —

விடுதலைப் புலிகள் லண்டனில் சர்வதேச தலைமையகத்தையும், நியுயோர்க், ரொறொன்ரோ ஆகிய இடங்களில் அமைப்புகளையும் வைத்துள்ளனர். தமது நடவடிக்கைகளுக்கென இவர்கள் தாராளமான வசதிகளை வைத்துள்ளனர் - என்று தெரிவித்தார்.

அரசியல் புகலிடம் கோருவோரையும், அகதிகள் என்று கூறிக் கொள்வோரையும் தாராளமாக வரவேற்கும் பல நாடுகளின் ஆதரவை அவர்கள் பெற்றுள்ளனர்.

நட்பு நாடுகளுக்கு எதிராக மனிதாபிமானமற்ற செயல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு இந்த மனித நேயமற்ற உதவி இடமளிக்கக் கூடாது.

இவ்வாறு திரு சில்வா தெரிவித்திருக்கிறார். [ஐ]

# அரசின் தீர்வு யோசனைக்கு ஆதரவு தெரிவிக்கிறது கத்தோலிக்க யூனியன்

கொழும்பு, ஒக் 10

தென்பகுதியில் இனப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு சமூகப் பிரிவினரும் தற்போது தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள். பெரும்பாலான கருத்துக்கள் அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டையும் அரசாங்கத்தின் அரசியல் யோசனைகளையும் வலியுறுத்துவனவாகவே இருந்து வருகின்றன.

இலங்கையில் கத்தோலிக்க யூனியன் தலைவர் எம். டி. எம். சமரசிங்க, அதன் நடப்பு விவகாரக் குழுவின் தலைவர் நெவில் டி சில்வா ஆகியோர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

இலங்கையில் யுத்தம் நடைபெறுவதால் பல அப்பாவி மனிதர்களின் உயிர்கள் அழிக்கப்படுகின்றன. அநேகமானோர் அங்கவீனம் அடைகின்றனர். குழந்தைகள் பலர் பெற்றோரை இழந்து அநாதையாகி உள்ளனர். பெண்கள் விதவைகளாகி இருக்கின்றனர். இளைஞர்கள் உயிரிழந்துள்ளார்கள். பலர் பல்வேறு காரணங்களுக்காக அகதிகள் ஆகியுள்ளனர். இந்த நிலைமையை அனுபவித்த பலர் இந்தத் துயரத்தை நன்கு விளங்குகிறார்கள்.

பாதுகாப்பு உணர்வும் சமாதானச் சூழலும் இல்லாமற் போய் விட்டன. யுத்தத்தால் ஈடுசெய்ய முடியாத நஷ்டங்களும் எண்ணற்ற பிரச்சினைகளும், சவால்களும் தோன்றியுள்ளன. வாழ்க்கைச் செலவு உயர்ந்திருக்கிறது அபிவிருத்தி தடைப்பட்டிருக்கிறது. நல்லெண்ணமும் பாதுகாப்பும் அருகி வருகின்றன. இந்த வருந்தத்தக்க நிலைமையை நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமா?

அனைவரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உரிய பங்களிப்பைச் செலுத்த வேண்டும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பணியாற்ற வேண்டும்.

இந்தப் பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்க்க முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். இது குறுகிய நோக்கம் ஆகும். இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர நிரந்தர அரசியல் தீர்வு அவசியம். பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு அரசியல்வாதிகள் முன்னுரிமை கொடுப்பது அவசியம்— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

# அலுவலக பணியாளருக்கு தொழில் பரீட்சை நடக்கு

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் பணிபுரியும் தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கு அலுவலகப்பணியாளர் சேவை வகுப்புக்கான தொழில் பரீட்சை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்கள் திருப்தியான சேவையுடன் ஐந்து வருடங்களுக்கான வேதன ஏற்றங்களை ஒழுங்காகப் பெற்றுள்ள பதவியில் உறுதிப் படுத்தப்பட்டுள்ள அலுவலக பணியாளர் சேவை 3 ஐ சார்ந்த பணியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் வடக்கு - கிழக்கு மாகாண அரச சேவையை சார்ந்த வர்களாகவும் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்ற தயாராகவும் இருத்தல் வேண்டும்.

பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வெற்றிடங்களைக் கருத்திற் கொண்டு தெரிவு மேற்கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் —

விண்ணப்பப்படிவங்களை அவ்வவ் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்று இம் மாதம் 18ஆம் திகதிக்கு முன் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் வலயம் 2 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## பரீட்சை இங்கு?

வவுனியாவில் இடம்பெற உள்ள பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு தெரிவானவர்களை இன்று செவ்வாய்க்கிழமை [illegible] யாழ். இந்துக் கல்லூரியில் கூடுமாறு கோரப்பட்டுள்ளது.

## அதிரடி அரங்கு

''தொண்டமானுக்குப் பின் மலையகத் தமிழர்களின் ஏக தலைவராக பிரதியமைச்சர் சந்திரசேகரன் வருவாரா?'' என்று தொண்டாவிடமே கேட்கப் பட்டபோது அவர் கூறிய பதில் என்ன?

''சந்திரசேகரன், ஆகாயக்கோட்டை கட்டுகிறார். அவரின் கனவு ஏதும் நனவாய் போவதில்லை.

''யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் ஒரு மாதிரியானவர்கள். தமக்கு தமக்கு எனப் பிரச்சினை வரும் போது அடுத்தவர்களை அவர்கள் மறந்து விடுவார்கள்; கைவிட்டுவிடுவார்கள். இதை நன்கு புரிந்து கொண்டு தான் அவர்களுடன் சேர்ந்தும் சேராமலும் நான் இவ்வளவு காலமும் அரசியல் நடத்தி வருகின்றேன். ஆனால் இந்த யதார்த்த நிலை சந்திரசேகரனுக்கு விளங்கவில்லை.

''அவர் வடக்கு தமிழரிடையே உள்ள இடதுசாரி சக்திகளைச் சேர்த்துக் கொண்டு ஏதோ ஒரு கோட்டையைக் கட்டலாம் எனக் கனவு காண்கின்றார். அந்த இடதுசாரிகளுக்கு வடக்கிலேயே தளம் இல்லை. பின்னர் எப்படி அவர்களுடன் சேர்ந்து இவர் பெரிய சக்தியாக வளர்வது? சந்திரசேகரனின் கனவு விரைவில் கலைந்துவிடும்''— என்று பதிலளித்தார் தொண்டா.

—மின்னல்

# பிறப்புச் சான்றிதழுக்கு பதிலாக வேறு ஆவணம்

கொழும்பு, ஒக். 10

பிறப்புச் சான்றிதழுக்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய வேறு பல ஆவணங்களை பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் அறிமுகம் செய்துள்ளது.

பிறப்பு பதிவாளரினால் இலவசமாக வழங்கப்படும் பிறப்பு பதிவு இடாப்பின் பிரதி ஒன்றையும் பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாகச் சமர்ப்பிக்கலாம் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

பிறப்புபதிவேட்டில் இருந்து பிரதி பண்ணப்பட்ட குறிப்பு, உத்தேச வயதுச் சான்றிதழ், சுவிகார சான்றிதழ், பிறப்பு பதிவேட்டில் இருந்து சான்றுப் படுத்தப்பட்ட பிரதி என்பனவற்றையும் பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாகச் சமர்ப்பிக்க முடியும் என்றும் அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## வாவிகளில் மர்மச் சடலங்கள்:

# 9 அதிரடி படையினரையும் பிணையில் விடக்கோரிக்கை

கொழும்பு, ஒக். 10

வாவிகளில் மிதந்த மர்மச் சடலங்கள் தொடர்பாகக்கைது செய்யப்பட்ட 9 அதிரடிப் படையினரையும் பிணையில் விடுவதா, இல்லையா என்பது தொடர்பாக எதிர்வரும் 19 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப் படும்.

அண்மையில் சந்தேக நபர்கள் ஒன்பது பேரும், கொழும்பு பிரதி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அப்போது சந்தேக நபர்களை பிணையில் விடுமாறு, அவர்களுக்காக வாதாடிய சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போதுசந்தேக நபர்கள் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர்கள் வாதாடினர்.

சந்தேக நபர்களுக்காக வாதாடிய சட்டத்தரணி ஒருவர் தமது கட்சிக்காரர்கள் சோதனைச் சாவடிகளில் வைத்து இரு தமிழர்களைக் கைது செய்து தமது மேலதிகாரிகளிடமே ஒப்படைத்ததாகத் தெரிவித்தார்.

அடையாள அணி வகுப்பில் தமது கட்சிக்காரர் அடையாளம் காட்டப்படவில்லை எனவும் எடுத்துக் கூறினார்.

இதே போன்றே ஏனைய சட்டத்தரணிகளும் தெரிவித்தனர்.

அதனை அடுத்து சந்தேக நபர்களை இம்மாதம் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கும் படியும்—

19 ஆம் திகதிய விசாரணைகளின் பின்னர் அவர்களை பிணையில் விடுவது பற்றி முடிவு செய்யப்படும் என்றும் நீதிவான் அறிவித்தார். [ஒ-எ]

# அச்சுவேலி ப. நோ. கூ. ச. கிளைகள்

அச்சுவேலி ஒக். 10

வலி கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) ப. நோ. கூ. சங்கத்தின் கிளை நிலையங்கள் தென்மராட்சிப் பகுதியில் திறக்கப்படவுள்ளன.

இடம் பெயர்ந்து தென்மராட்சியில் தங்கி இருக்கும் சங்க உறுப்பினர்களுக்கு பங்கீட்டு பொருள்களை விநியோகிப்பதற்கு வசதியாகவே அங்கு இவை நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. [க-11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னசிறு விளம்பரம்

### வீற்பனைக்கு

230V & 110V "Robin" 3½ K.V. ஜெனரேற்றர், Upright Deep Freezer, "USHA" Bottle Cooler, "Regent" 10x50 தொலைநோக்கி, நுணுக்குக்காட்டி (Laboratory Microscope) "Kemble" பியானோ, முதலியன "டாஸ் கொம்ப்ளெக்ஸ்" 161. பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(38897)

### தவறிவிட்டது

ஆனைக்கோட்டை — கிளாலி பயணத்தின்போது கி. ஜெயகாந்தன் எனும் பெயருடைய அடையாள அட்டை, பாஸ் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். சின்னத்துரை ஜெயகாந்தன், 'ஜெயா' அழகுமாடம், 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[38915]

### விதைநெல் விற்பனைக்கு

உயர்ந்து வளர்ந்து நல்ல விளைவைத் தரக்கூடிய 3½ மாத 'இளங்கலையன்' நெல் விற்பனைக்குண்டு. தொடர்பு: 10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(8657)

### சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஏஸியா சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தம்பு வேலுப்பிள்ளை, இல. 40/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (தீவக இலங்கை செஞ்சிலுவை சங்க கிளை அருகில்)

(38927)

### இலக்கணம்

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய ஒத்த கருத்துச் சொற்களும், எதிர்கருத்துச் சொற்களும் ஆண்டு 5, 6, 7, 8, 9, 10 மாணவர்களுக்கு. தொகுப்பு: வெ. நவமோகன். விற்பனையாகின்றது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-2399)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் சுப்பையா திருநாவுக்கரசு

(இணுவில்)

மலர்வு: 21 — 05 — 1921

உதிர்வு: 10 — 09 — 1995

எமது குடும்பத்தின் அன்புத் தெய்வமே! உங்களின் சொல்லிலும் செயலிலும் அன்பைத் தரிசித்தோம். உங்கள் அன்பான வழிகாட்டலின் கருணையையும், பணியையும் கற்றறிந்தோம். இன்று தங்கள் பிரிவால் மனம் வருந்துகிறோம். தங்கள் ஆத்மசாந்திக்காக இறைவன் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும், எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இன்று (10-10-1995) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

திரு தி. புரந்திரதாசன்
[கிராமசேவகர், இணுவில்],
7ஆம் கிலோ மீற்றர்,
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

[38929]

## வல்வை ஆஸ்பத்திரியில் ஊழியர் பதற்றத்துடன் பணி

வடமராட்சி, ஒக்.10

வடமராட்சிப் பகுதியில் அடிக்கடி நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களினால் வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் பெரிதும் பதற்றமும், அச்சமும் அடைந்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக இந்த வைத்தியசாலை சுற்று வட்டாரத்தில் அடிக்கடி ஷெல்கள் வந்து விழுந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

வல்வை வைத்தியசாலை ஏற்கனவே பல தடவைகள் கடற்படை, விமானப்படைகளின் தாக்குதல்களுக்கு இலக்கானது என்பதும் நினைவு கூரத்தக்கது.

[ஒ-க-173]

### மந்திகை ஆஸ்பத்திரியில் கடமை

வலிகாமம் கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மூடப்பட்ட அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய ஊழியர்களில் ஒரு பகுதியினர் தற்போது மந்திகை ஆஸ்பத்திரியில் கடமையாற்றுகின்றனர்.

[எ-173]

## பெண்களுக்கு குறுகிய கால விவசாய பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 10


திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் உணவைப் பாதுகாத்தல், போசாக்கு உணவு தயாரித்தல் ஆகிய துறைகளில் பெண்களுக்கு குறுகிய கால விவசாயப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

ஐந்து நாட்களுக்கு தொடர்ச்சியாக நடைபெற உள்ள இந்த பயிற்சி நெறியின் போது நாளொன்றுக்கு 20 ரூபா ஊக்குவிப்புப்பணமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

# 100-வது பிறந்தநாள் நினைவுதினம்

(10-10-1995)






மயிலிட்டி — கொல்லங்கலட்டி

## அமரர் சிற்றம்பலம் சண்முகம்

(இளைப்பாறிய பிரதம தபாலதிபர், யாழ்ப்பாணம்)

மன்னுபுகழ் யாழ்ப்பாணம் மயிலையம் பதிதனிலே
புண்ணியஞ் செய் இணையடியில் பொலிவுடனே பிறந்த
சிற்றம்பலத்துக்கும் சின்னப்பிள்ளைக்கும் சிரேஷ்டபுத்திரனாய்
நற்றவஞ் செய் நற்கட்டியோடைதனில் சண்முகனார் அவதரித்தார்

சிறுவயதில் கல்விகற்று சிறப்பான பதவிபெற்று
ஓய்வின்றி உழைத்தவராம் உத்தமனார் சண்முகனார்
உண்மை நேர்மை கடமையென உள்ளத்தால் பேணியதால்
உத்தியோக உயர்வுடனே ஒருபரிசும் கிடைத்ததுவே!

ஏழாறாக இயைந்திடு வருடம்
தபால் இலாகாவில் தங்கிடும் அதிபராய்
சேவை புரிந்த செம்மலானோன்
இங்கிலாந்தென்னும் இரும்பதி தனிலுறும்
எலிசபெத் தென்றிடும் இராணியார் தன்னால்
சிறப்புறச் சேவை செய்திடுவோர்க்கு
வழங்கிடு தங்கப் பதக்கம் தன்னைத்
தபால் சாகாவில் தான் புரிந்தருளும்
ஒப்பிலாச் சேவையால் உரிமையாக்கியோன்
தந்தியடிப்பதில் தகுதிமிக் குடையோன்

கபிலர் ஆகவல் கவினுறு பாரதம்
தேவாரத் தோடு திருவாசகமும்
பட்டினத்தார் பாடல் பகர் இராமலிங்கர்
பாடல்கள் எல்லாம் படித்துணர்ந் திருந்தார்
தான் சுவைத் திருந்ததைத் தக்கோர் தமக்கும்
உரைத்தே விளங்கும் உத்தம சீலன்

மச்சான் சிவபாக்கியத்தை மணஞ்செய்து இல்லறத்தில்
பெற்றனரே மக்கள் ஐவர் பேரர்களும் எழுவர்
வல்லானாம் ஆரணி வந்தடைந்தான் பேரனிடம்
பொலிலப்பா! உங்களுக்கு பூட்டிகளும் இருவர் உளர்.

### உங்கள் 100ஆவது பிறந்த நாளில்

உங்களையும் அம்மாவையும், தங்காவையும்
உற்றார், உறவினர், நண்பர்களுடன் நினைவு கூரும்

புவனேஸ்வரி, குகடாசன் [வவுனியா], மீரா, விஜயகுமார், யாழினி, யோகினி [அவுஸ்திரேலியா] தபோதினி, முருகதன் [வவுனியா], சிவதாசன், சிவயோகலட்சுமிதேவி, குகதாசன், தேவி, சிறீதரன், மனோகரன், கிருபாகரன், ஜெனி, தர்மதாசன், கிருபாசக்தி, ஜெயதாசன், கனோஜனா.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(38930)

சென்டாவளவு,
இருபாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்தம் மோசமாகி வரும் குடாநாட்டின் உணவு நிலைமை

## புள்ளி விவரங்கள் தரும் உண்மைத் தகவல்கள்

தமிழுக்கு புரட்டாதி மாதம் முடியப் போகிறது. ஐப்பசி பிறந்தால் அடை மழை வந்துவிடும்.

அதன் பின்னர் தமிழுக்கு தை பிறக்கும் வரை [ஜனவரி நடுப்பகுதி வரை] கடல் கொந்தளிப்பாக இருக்கும். கடும் காற்றும் வீசும்.

ஆகையால் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் கப்பல்களில் உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து சேர்க்காவிடில், பெப்ரவரி வரை அதனை நினைத்தும் பார்க்க முடியாது.

அதாவது எதிர்வரும் நான்கு ஐந்து மாதங்களுக்கு கொழும்பில் இருந்து உணவுப் பொருள் வருவது அசாத்தியம்.

ஆனால் அரசோ —

வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவுப் பற்றாக்குறை எதுவும் இல்லை என்று பொய்யான புள்ளி விவரங்களை கொழும்பில் வெளியிட்டு வருகிறது.

அது மட்டுமன்றி குடாநாட்டில் ஏற்படக்கூடிய பெரும் உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதில் எவ்வித அக்கறையும் கொள்ளாதிருக்கிறது.

### பொய்யான புள்ளிவிவரம்

"குடாநாட்டில் உணவுத் தட்டுப்பாடு இல்லை. பட்டினி நிலை அபாயம் இல்லை" என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ். எம். ஜுனைத் அறிக்கை மேல் அறிக்கை விட்டு வருகிறார். சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தைத் தவிர்ப்பதற்கான தந்திரம் இது.

இத்தனைக்கும் —

குடாநாட்டில் உணவே இல்லை. பட்டினி நிலை நோக்கி குடாநாடு செல்கிறது — என்று யாழ். செயலகத்தில் இருந்து அவருக்கு நாளாந்தம் தகவல் அனுப்பப்படுகிறது.

பட்டினி நிலை உருவாகாமல் உடன் நடவடிக்கை எடுக்கவென கொழும்புக்கு விரைந்துள்ள அரச அதிபரும் உண்மையான நிலைமையைக் காட்டும் புள்ளி விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்.

உண்மை நிலை தெரிவிக்கப்பட்ட பின்னரும் அத்தியாவசிய சேவைகள் நாயகம் குடாநாட்டுக்கு, தேவைக்கும் மேலதிகமான உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அறிக்கை விடுவது உள்நோக்கம் கொண்டதாகும்.

இந்த அத்தியாவசிய சேவைகள் நாயகம் குடாநாட்டில் உள்ள மக்களின் எண்ணிக்கை தெரிந்தவர். அகதிகளின் எண்ணிக்கை தெரிந்தவர்.

குடாநாட்டுக்கு எவ்வளவு உணவு அனுப்பப்படுகிறது என்பதும் தெரிந்தவர்

அரசின் பொய்மையைப் புட்டுக்காட்டும் விதத்தில் —

யாழ் குடாநாட்டின் உணவு நிலை குறித்த உண்மை நிலையை வெளிப்படுத்துவதே —

இக்கட்டுரையின் பிரதான குறிக்கோளாகும்.

குடா நாட்டின் உணவுத் தட்டுப்பாட்டு நிலவரத்தை விளக்கும் இக்கட்டுரையின் புள்ளி விவரங்கள் செயலகத்தின் பதிவுகளில் இருந்து திரட்டப்பட்டவை.

### ஒருங்கிணைப்பு

இவ்வருட ஆரம்பத்தில் குடாநாட்டிற்குத் தேவையான பொருள்களை மாதாந்தம் ஆறு கப்பல்கள் மூலம் எடுத்து வரவும்—

முதல் 9 மாதங்களிலும் குடாநாட்டின் ஒரு வருடத்துக்கும் முழுமையாகத் தேவையான பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வரவும் —

யாழ். அரச அதிபர் ஒரு திட்டத்தை வகுத்து உணவுப் பொருள்களைத் தருவிப்பது சம்பந்தமான உதவிப்பணிகளையும் செயலகத்தின் கீழ் கொண்டு வந்தார்; ஒருங்கிணைத்தார்.

ஆனால் ஜனவரி மாதம் முதல் கடந்த மாதம் முடியும் வரையும் குடாநாட்டுக்கு தேவையான உணவுப் பொருள்களுடன் இருபத்தி நான்கு தடவைகள் மட்டுமே கப்பல்கள் பருத்தித்துறை வந்துள்ளன. எரிபொருள்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் 8 தடவைகள் வந்துள்ளன.

குடாநாட்டில் வாழும் ஏழு லட்சத்து 22 ஆயிரம் பொது மக்களுக்கு மாதாந்தம் 9 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் (அரிசி, மா, சீனி மட்டும்) தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த 9 மாதங்களிலும் குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட உணவுப் பொருள்களின் மொத்த தொகை 47 ஆயிரத்து 793 மெற்றிக் தொன் ஆகும்.

10 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் அரிசி, 29 ஆயிரத்து 20 மெற்றிக் தொன் மா, 8 ஆயிரத்து 73 மெற்றிக் தொன் சீனி ஆகியனவே எடுத்து வரப்பட்டுள்ளன.

### வந்தது அரைவாசி

9 மாதங்களுக்கும் குடாநாட்டு மக்களின் குறைந்த பட்ச அத்தியாவசிய உணவுப் பொருள் தேவை 81 ஆயிரம் மெற்றிக் தொன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது அத்தியாவசிய உணவுப் பொருள்களின் மொத்த தேவையில் அரைவாசிக்கு சற்றுக்கூடுதலாகவே வந்து சேர்ந்துள்ளன.

தனியாருக்கும், ப. நோ. கூ. சங்கங்களுக்கும் கப்பல் மூலமாகவும், லொறி ஊடாகவும் குறிப்பிட்ட அளவு உணவுப் பொருள்கள் வந்துள்ளன. அவை 5 ஆயிரம் மெற்றிக்தொன்களுக்கும் குறைந்த அளவினதாகவே வந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது

### மே மாதத்தின் பின்னர் தளர்வு

ஜனவரி மாதம் முதல் கடந்த மாதம் வரையான 9 மாதங்களில் கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை ஏழு கப்பல்கள் 24 தடவைகள் எடுத்து வந்துள்ளன. சராசரியாகப் பார்த்தாலும் மாதத்துக்கு மூன்று கப்பல் என்ற வீதத்திலேயே உணவுப் பொருள் வந்துசேர்ந்துள்ளது.

திருகோணமலையில் இருந்து 'ஹபரண' கப்பல் 14 தடவைகளும், "ஹெந்தல" கப்பல் ஒரு தடவையும் மாவை ஏற்றி வந்துள்ளன.

வருட ஆரம்பத்தில் கொழும்பில் இருந்து அரிசி, சீனி, பருப்பு, பால்மா மற்றும் உப உணவுப் பொருள்களை எடுத்துவரும் பணி ஓரளவு சுமாராக இருந்த போதிலும் மே மாதத்துடன் அதில் தளர்வு ஏற்பட்டது.

ஜூன் மாதத்தில் இருந்து செப்ரெம்பர் மாதம் வரையான 4 மாத காலத்தில் கொழும்பில் இருந்து நான்கு கப்பல்கள் பதினொரு தடவைகள் உணவுப்பொருள்களை கொண்டுவந்துள்ளன.

அந்த நான்கு மாதங்களும் மா தவிர்ந்த அரிசி, சீனி போன்ற பொருள்கள் 5 ஆயிரத்து 421 மெற்றிக் தொன்களே எடுத்து வரப்பட்டுள்ளன.

அக்காலத்தில் திருகோணமலையில் இருந்தும் ஐந்து கப்பல் மாவே எடுத்து வரப்பட்டது.

### பட்டினி நிலை வரும்

ஜூன் மாதத்தில் ஆரம்பித்த உணவுப் பற்றாக்குறை நிலை தற்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இனி மழை காலம் ஆரம்பித்துவிட்டால் பருத்தித்துறையில் பொருள்களை இறக்குவது கஷ்டம்.

இரண்டு மூன்று வாரங்களில் அவசர அவசரமாக உணவுப் பொருள்கள்

(7 ஆம் பக்கம் பார்க்க)

- ஊரோடி -

---

✶ குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களில் அரைவாசியே இதுவரை வந்துள்ளது.

✶ மே மாதத்தின் பின் உணவுக் கப்பல்களின் வருகை குறைந்தது.

✶ இடம்பெயர்ந்தோர் நிவாரணம் 15 வாரங்களாக வழங்கப்படவில்லை.

✶ புதிதாக இடம்பெயர்ந்தவர்களுக்கு எதனை வழங்குவது என்பது தெரியாமல செயலகம் திண்டாட்டம்

---

## கப்பல்கள் மூலம் வந்து சேர்ந்த உணவுப் பொருள்கள்- அட்டவணை

[மெற்றிக் தொன்னில்]

| கப்பல் | அரிசி | மா | சீனி | பருப்பு | பால் மா | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| 1. ஹபரண (8 - 1 - 95) | — | 1,899.9 | — | — | — | — |
| 2. கோமரி [14 - 1 - 95] | 1,200 | — | 1,000 | 260 | 100 | — |
| 3. ஹபரண [20 - 1 - 95] | — | 1,899.9 | — | — | — | — |
| 4. ஹபரண [7 - 2 - 95] | — | 1,899.9 | — | — | — | — |
| 5. கோமரி [15 - 2 - 95] | 1,600 | — | 1,100 | 303 | 70.7 | 82 |
| 6. ஹபரண [22 - 2 - 95] | — | 1,924 9 | — | — | — | — |
| 7. லங்கா முடித [27 - 2 - 95] | 1,250 | — | 1,000 | 300 | 60 | 80 |
| 8. ஹபரண [8 - 3 - 95] | — | 1,949.99 | — | — | — | — |
| 9. ஹபரண (16 - 3 - 95) | — | 1,949.99 | — | — | — | — |
| 10. ஹபரண [29 - 3 - 95] | — | 1,949.99 | — | — | — | — |
| 11. லங்கா முடித [31 - 3 - 95] | 1,200 | — | 1,000 | 856.7 | 50 | — |
| 12. ஹபரண (9 - 4 - 95) | — | 1,949.9 | — | — | — | — |
| 13. ஹபரண (7 - 5 - 95) | — | 1,949.9 | — | — | — | — |
| 14 லங்கா முடித [10 - 5 - 95] | 1,249 5 | — | 745 | 297.5 | — | — |
| 15. ஹபரண [23 - 5 - 95] | — | 1,949.9 | — | — | — | — |
| 16. கல்யாணி | 1,000 | — | 808 | 801 | — | 101 |
| 17. ஹபரண (13 - 6 - 95) | — | 1,923.92 | — | — | — | — |
| 18. ஹபரண [20 - 6 - 95] | — | 1,947.52 | — | — | — | — |
| 19. லங்கா முடித (20 - 6 - 95) | 1,284 | — | 804 | 404 | 103 | — |
| 20. கல்யாணி (3 - 7 - 95) | 917 | — | 810 | 202 | 52 | — |
| 21. ஹபரண (6 - 7 - 95) | — | 1,950 | — | — | — | — |
| 22. ஹபரண (22 - 7 - 95) | — | 1,949.96 | — | — | — | — |
| 23. கல்யாணி [2 - 9 - 95] | 1,000 | — | 806 | 260 | 50 | — |
| 24. ஹெந்தல (10 - 9 - 95) | — | 1,925 | — | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையினரின் ஷெல் வீச்சால் அழியும் வாழை மரங்கள்

வலி. தெற்கு. செப். 10

வலிகாமம் கிழக்கில் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களால் பல நூற்றுக்கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்துள்ளன. சில இடங்களில் வாழைத் தோட்டங்கள் முற்றாக அழிந்துபோயுள்ளன.

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஏவிய ஷெல் குண்டுகள் ஊரெழு, நீர்வேலி, கோப்பாய், உரும்பராய் பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களிலும் விழுந்து வெடித்தன. இதனால் வாழை மரங்கள் சிதறி சின்னாபின்னமாகியுள்ளன.

ஏற்கனவே இராணுவத்தினரின் கெடுபிடிகளாலும் மழையின்மையாலும் அழிந்த நிலையிலும் கைவிடப்பட்ட நிலையிலும் பல வாழை தோட்டங்கள் காணப்பட்ட போதிலும் அண்மையில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களால் எஞ்சியிருந்த பல வாழைகளும் முற்றாகச் சேதமடைந்து விட்டன.

(ஒ-152)

## கணனி இயக்குநர்

கணனி தரவுப் பதிவு வேலைகளில் அனுபவமும், ஆற்றலும் உள்ளவர்களிடமிருந்து கணனி இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கணனியியல் மற்றும் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நாளை புதன்கிழமை (11 - 10 - 95) காலை 9மணிக்கு நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## காணவில்லை

### திரு. வைரவன் மாதன்

சுழிபுரத்தைச் சேர்ந்தவர் வயது-65 கண்பார்வை அற்றவர். மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து 25-09-95 முதல் காணாமல் போய்விட்டார். இவரைக் கண்டவர்கள் அல்லது தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

செல்வி நா. இராஜஸ்ரீதேவி,
இராஜ நகர்,
அம்பன், குடத்தனை. [38931]

## 90-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 10 — 1943

மறைவு: 14 — 07 — 1995

### திருமதி சுசிலாதேவி செல்வேந்திரா

(ஆசிரியை, யா/சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்)

தன்னையே தீபமாக்கி தரணியில்
நம் நலம்காத்த நன்னுயிரே
மாண்டு நீ மாதங்கள் மூன்றாயினும்
மாறாது மங்காது மனத்துயர்

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரங்கள், மற்றும் உறவினர்,
நண்பர்கள்,

பங்களா ஒழுங்கை,
மல்லாகம். (38828)

## ஷெல் வீச்சுக்கு அஞ்சிய நிலையில் விவசாயிகள் காலபோக வேளாண்மை

அளவெட்டி, ஒக். 10

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குச் சமீபமாக உள்ள வயல் நிலங்களிலும் இம்முறை காலபோக வேளாண்மை துரிதமாக நடைபெற்று வருகிறது. எனினும் வயல்களில் விவசாயிகள் பீதியுடனேயே நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் அளவெட்டிப் பகுதியில் இம்முறை காலபோக நெற்செய்கை கைவிடப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அலுக்கைப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் அடிக்கடி ஷெல் தாக்குதல் நடத்துவதாலும், துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்ப்பதாலும் சுந்தரோடை உத்திகை வயல்களில் இம்முறை காலபோக நெற்செய்கை பண்ண முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சண்டிலிப்பாய்க்கு சமீபமாக உள்ள அம்மன் கோவில் பகுதியில் காலபோக நெற்செய்கை துரிதமாக நடைபெற்று வருகிறது.

எனினும் படையினர் ஷெல் வீச்சு நடத்தலாம் என்ற அச்சத்துடனேயே விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (இ-13)

## புலிகளின் குரல் வானொலியில்

### 10 - 10 - 1995

**செவ்வாய் இரவு**

★ 8-02 — சிறப்பு நிகழ்ச்சி — செல்வி. பூரணா வேலுப்பிள்ளை எழுதிய "ஓம் லெப் மாலதி"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக் களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய "போய்யும் புரட்டும்"
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

### 11 - 10 - 1995

**புதன் காலை**

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் - தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

**செவ்வாய் மாலை**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — என் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் தொடர்ந்து இவ்வாரம் இவர்

## புதிய எழுத்தாளர்களுக்கு சிறுகதை, கவிதைப் போட்டி

இவ்வாண்டு நவம்பர் மாத இறுதியில் நடைபெற இருக்கும் "1995 சுதந்திர இலக்கிய விழா" வின் நிமித்தம் புதிய எழுத்தாளர்களுக்கான சிறுகதை, கவிதைப் போட்டி ஒன்று நடத்தப்பட உள்ளது.

போட்டி முடிவுத் திகதி இம்மாதம் 31 ஆம் திகதி ஆகும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை அமைப்புக் குழு, இல. 61, பழைய கொட்டாவ வீதி, மிரிஹான, நுகேகொடை என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

'சுதந்திர இலக்கிய விழா' வில் 1994 ஜனவரி முதல் டிசம்பர் வரை நூலுருவில் வெளியாகிய கவிதை, சிறுகதை, நாவல், மொழி பெயர்ப்பு ஆகிய அனைத்து இலக்கியப் படைப்புகளும் மதிப்பிடப்பட்டு சிறந்த படைப்புகளுக்கு விருதுகளும் பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (க)

## வாக்குறுதிகளை மீறி விட்டு அரசு யுத்த பிரசாரத்தில்!

### சாடுகிறார் எதிர்க்கட்சி எம். பி.

ஜனாதிபதி தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறி விட்டது. அதனைத் திசை திருப்ப வடக்கில் யுத்தம் வெற்றிகரமாக முன்கொண்டு செல்லப்படுகிறது என அரசு பிரசாரங்களைச் செய்துவருகிறது.

இப்படித் தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன.

அவசர காலச் சட்டம் நீடிப்பது தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சோபை இழந்து வரும் மருதனார்மடம் சந்தை

வலி. தெற்கு, செப்.10

வலிகாமம் கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் "இடிமுழக்கத் தாக்குதல்" நடவடிக்கைகளால் மருதனார்மடம் சந்தைக்கு வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

சுன்னாகம் சந்தை செயலிழந்ததைத் தொடர்ந்து மருதனார்மடம் சந்தையில் பெரும் எண்ணிக்கையானோர் கூடிய காரணத்தால் சந்தையில் இடநெருக்கடி நிலை ஏற்பட்டது.

ஆனால் தற்போதைய இராணுவ நடவடிக்கைகளின் பயனாக மருதனார் மடம் சந்தை வெறிச்சோடிக் கிடக்கின்றது.

உரும்பிராய், ஊரெழு, கோண்டாவில், நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன், ஏழாலை புத்தூர், நவக்கிரி போன்ற இடங்களில் இருந்து விவசாய உற்பத்தியாளர்கள் தமது விளை பொருள்களை விற்பனை செய்வதற்கு மருதனார் மடம் சந்தையையே நாடி வந்தனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக மேற்படி இடங்களில் வாழ்ந்த விவசாயிகளும் இடம் பெயர்ந்து விட்டனர். அவர்கள் மீண்டும் தமது பகுதிகளுக்கு சென்று தமது விளை பொருள்களை அறுவடை செய்து சந்தைக்குக் கொண்டு வரமுடியாத நிலையில் உள்ளனர்.

இதன் காரணமாக மருதனார்மடம் சந்தையில் வியாபாரிகளின் வருகை பெருமளவு குறைந்து காணப்படுகின்றது. விளை பொருள்கள் சந்தைக்கு வராமையால் மரக்கறி வகைகளின் விலையும் வெகுவாக அதிகரித்துள்ளது. (ஒ-152)

## ஒரு லட்சம் போத்தலில் பனம் கள்ளு

சண்டிலிப்பாய், ஒக். 10

சங்கானை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ்இயங்கி வரும் போத்தலில் "பனங்கள் அடைக்கும் தொழிற் சாலையில் இவ்வருடம் சுமார் ஒரு லட்சம் போத்தல்களில் கள் அடைக்கப்பட்டுள்ளது."

## விடுதலையை ஏற்க பலஸ்தீன கைதி மறுப்பு

ஜெருசலேம், ஒக். 10

இஸ்ரேல பலஸ்தீனப் பெண் கைதி ஒருவரை விடுதலை செய்துள்ளது.

எனினும் விடுதலையை ஏற்க அப் பெண் கைதி மறுத்து விட்டார்.

எல்லோரையும் விடுதலை செய்தால் மட்டுமே தாம் விடுதலையை ஏற்கத் தயாராக இருப்பதாக அப் பெண் கைதி தெரிவித்துள்ளார். (இ)

## பங்களாதேஷில் 3ஆம் நாளாக ஸ்தம்பித நிலை

### எதிர்க்கட்சிகள் வேலை நிறுத்தம்

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியா பதவி விலக வேண்டும் எனக்கோரி எதிர்க்கட்சித் தலைவி ஹஸீனாவின் தலைமையில் நடந்து வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் பல நகரங்களில் மூன்றாவது நாளாக இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது.

வேலை நிறுத்தப் போராட்டம் ஒரு புறம் நடக்க டாக்கா உட்பட முக்கிய நகரங்களில் வெள்ளத்தால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. (இ-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
229/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சந்திரிகா விலாங்கா?

கொழும்பு சுதந்திரசதுக்க அரங்கில் தொழிற்சங்கவாதிகளைக் கௌரவிக்கும் விழாவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நீண்ட உரை ஒன்றை ஆற்றினார்.

இனப்பிரச்சினை, போர் என்பன குறித்தே அவரது பேச்சு பிரதானமாக அமைந்தது. இரண்டு விடயங்கள் குறித்தும் அவர் காரசாரமாக வெளுத்து வாங்கினார்.

சில பிக்குமார் உட்படப் பலர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இத்தகைய குழுவினரை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் — என்றார்.

அவர்கள் கூறுவது போல, போர் நடத்துவதானால், ஒரு லட்சம் இளைஞர்களைப் படையில் சேர்க்க வேண்டும். அதற்காக இவர்கள் 50,000 கோடி ரூபா பெற்றுத் தருவார்களா — என்று கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதி உண்மையிலேயே இராணுவத் தீர்வை விரும்பவில்லையெனில், இப்போது வடக்கு - கிழக்கில் போரை நடத்துவது ஏன்? தமிழ்ப் பொதுமக்களையும் தமிழர்களின் வருங்காலச் சந்ததியினரான சிறுவர்சிறுமியர்களைக் கொன்றொழிப்பதேன்? தமிழர்களின் சொந்த இடங்களை ஆக்கிரமித்து, அவர்களை இடம்பெயரச் செய்வதேன்? தமிழ் மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பாமல் பட்டினி போட்டு அடிபணிய வைக்க முயற்சிப்பது ஏன்?

வடக்கில் உள்ள பொதுமக்கள் விடுதலைப் புலிகளுக்கு அளித்துவரும் ஒத்துழைப்பை நிறுத்தும் வரை போரை நிறுத்த முடியாது என்று கூறுவது—

இராணுவத் தீர்வை நாடும் ஒருவர் கூறுவதா அல்லது அதனை விரும்பாத ஒருவர் கூறுவதா?

இராணுவத்தீர்வை விரும்புபவர்களைக் கண்டிப்பவர் அதற்கு முரணாக போரை நிறுத்த முடியாது என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாவிடில், ஒரு பிரபாகரனுக்குப் பதிலாகப் பத்தாயிரம் பிரபாகரன்கள் தோன்றுவார்கள் என்பதனையும் சந்திரிகா உணர்ந்திருக்கிறார்.

அப்படியெனில், போரை நிறுத்த முடியாது என்று சொல்வதேன்? அதன் நோக்கம் என்ன?

மொத்தத்தில் இராணுவத் தீர்வை விரும்பாதவராகக் காட்டிக் கொண்டு—

போரைத் தொடர வேண்டும் என்று இராணுவத் தீர்வுக்குச் சாதகமாக, அது அவசியமானது என்று வற்புறுத்தும் விதத்தில் சந்திரிகா பேசியிருக்கிறார்.

இரண்டையும் போட்டுக் குழப்பி அடித்திருக்கிறார். தமது உண்மையான நிலைப்பாடு எது என்பதனை சிங்கள மக்கள் இலகுவில் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குக் கருத்துக்களைக் குழைத்திருக்கிறார்.

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற நிலையில் பாம்புக்கு வாலையும் மீனுக்குத் தலையையும் காட்டும் விலாங்கு போல நின்று—

சிங்களவர்களின் இரு தரப்பினரதும் ஆதரவைப் பெறும் முயற்சியே சந்திரிகாவின் பேச்சு. இந்தத் தந்திரம், நீண்ட காலம் பலிக்காது. மிகக் குறுகிய காலத்தில் புஸ்வாணமாகிவிடும்.

# தென்மராட்சியில் தங்கியுள்ளோருக்கு ஒருவார உலர் உணவு விநியோகம்

தென்மராட்சி, ஒக். 10

இடிமுழக்க இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு தென்மராட்சிப் பகுதியில் நலனோம்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு ஒரு வார உலர் உணவுப் பொருள் நேற்று திங்கள் முதல் வழங்க பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இராணுவ முற்றுகைக்கு உள்ளான அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்செழு, நவக்கிரி, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் வடக்கு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒருவார உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தாம் தங்கியுள்ள பிரிவு கிராம அலுவலரிடம் தமது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

இதேவேளை— வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள ஆயிரத்து 834 குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தோர் உலர் உணவு அல்லது பணம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ஐ-117)

## விளையாட்டு நிகழ்வு

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 15 வயது, 17 வயது, 19 வயது ஆகிய பிரிவுகளிடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் மூன்றாம் இடத்தைப் பெறும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 15 வயது பிரிவு:- மீசாலை வீரசிங்கம் ம. வி. எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி

★ 17 வயது பிரிவு:- சாவகச்சேரி டிறிபேக் எதிர் மீசாலை வீரசிங்கம் ம. வி.

★ 19 வயது பிரிவு:- மீசாலை வீரசிங்கம் ம. வி. எதிர் கச்சாய் அ. த. க. பாடசாலை (117)

## தென்மராட்சி வயல்களில் பெருமழையால் வெள்ளம்!

தென்மராட்சி, ஒக். 10

கடந்த சனிக்கிழமை இரவு பெய்த பெரு மழையினால் தென்மராட்சிப் பகுதியில் பெரும்போக நெற்செய்கை வயல்கள் வெள்ளத்தால் நிரம்பியுள்ளன.

வயல் பகுதிகளில் உள்ள குளங்கள் நிரம்பியுள்ளதாலும் வயல்களில் இயற்கைப் பசளைகள் போடப்பட்டிருப்பதாலும் வெள்ளத்தை வெளியேற்ற முடியாத நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

நெல் விதைத்த வயல்களில் அளவுக்கு அதிகமாக வெள்ளம் நிற்பதால் பயிர் அழியும் அபாயம் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## மட்டக்களப்பில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 10

மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினர் மீது நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ★ ஆம்கோர் அல்லது 3 8 டொங்கான் | — | 1 |
| ★ கோல் கொமாண்டோ | — | 4 |
| ★ ஏ.கே ரக துப்பாக்கி | — | 3 |
| ★ 40 மி.மீ ஷெல்கள் | — | 12 |
| ★ கோல் கொமான்டோ மகஸீன் | — | 7 |
| ★ ஏ கே. ஹோல்ஸ்டர் | — | 10 |
| ★ 5.56 ரக ரவைகள் | — | 375 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 50 |
| ★ கைக்குண்டுகள் | — | 8 |

[ஐ-3]

## 3 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 10

மட்டக்களப்பில் விசேட அதிரடிப் படையினர் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர். அவர்களின் விபரம் வருமாறு:-

★ மேஜர் ஆரமுதன் அல்லது லக்கிதாஸ் (கறுவாக்தம்பி சிவநாதன் — மட்டக்களப்பு),

★ கப்டன் சத்தியவீரன் அல்லது சக்தி (அழகரத்தினம் தர்மலிங்கம்- மட்டக்களப்பு).

★ வீரவேங்கை செல்வகாந்தன் அல்லது சுகந்தன் (வெள்ளைக்குட்டி புவீந்திரராஜா— மட்டக்களப்பு). [உ-3]

## கல்விக் கழக ஆசிரியருக்கு உதவு தொகை வழங்கல்

யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், தெல்லிப்பளை, சங்கானை, சண்டிலிப்பாய், ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த கல்விக் கழக ஆசிரியர்களுக்கான புரட்டாதி மாத உதவு தொகைக் கொடுப்பனவு கல்விக்கழக நடுவப்பணியகத்தில் பின்வரும் நாள்களில் பிற்பகல் 2 மணி முதல் வழங்கப்படுமென தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் தங்கள் கல்விக் கூட முதல்வரால் உறுதிப்படுத்தப்பட்ட படிவத்தினைப் பெற்று, குறிப்பிட்ட நாள்களில் வருகை தந்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ யாழ்ப்பாணம், நல்லூர்— 11 ஆம் திகதி புதன் கிழமை.

★ உடுவில், தெல்லிப்பழை— 12 ஆம் திகதி வியாழக்கிழமை.

★ சங்கானை, சண்டிலிப்பாய்— 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை. [ஐ]

## நாளாந்தம்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வந்து சேர்க்கப்படாவிடில் பட்டினி நிலை உருவாக வாய்ப்பு உண்டு என்று அஞ்சப்படுகிறது.

இப்போதைய உணவுத் தட்டுப்பாட்டினால் இடம்பெயர்ந்த மக்களே பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த வலிகாமம் வடக்கு, தீவகப் பகுதி மக்களுக்கு வாராந்த நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

56ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த அவர்களுக்கு மாதாந்தம் நிவாரணம் வழங்க 2 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் தேவை.

அதனைக் கூட அரசு ஒழுங்காக அனுப்பாததால் அவர்கள் கடந்த 15 வாரங்களாக நிவாரணம் இன்றி கஷ்டநிலையில் வாழ்கின்றனர்.

அவர்கள் தவிர முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை மற்றும் வலி. வடக்கு, வலி. கிழக்குப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த 70,000 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 80 ஆயிரம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது எப்படி எங்கிருந்து உணவுப்பொருள்களைப் பெறுவது என்பது தெரியாத நிலையில் யாழ். செயலகம் திண்டாடுகிறது.

அரசு திட்டமிட்டே குடாநாட்டில் உணவுத் தட்டுப்பாட்டை உருவாக்குகிறது என்பது இதிலிருந்து புலப்படுகிறது.

திட்டமிட்ட முறையில் வடக்குக்கான உணவு விநியோகத்தைத் தடை செய்யும் அரசின் நடவடிக்கைக்கு முகம் கொடுக்க குடாநாட்டு மக்கள் தயாராக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனை ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது.

பட்டினி உங்கள் வீட்டுக் கதவைத்தட்டும் வரை காத்திராது அதனைத் தடுக்க அனைவரும் சேர்ந்து [illegible] வேண்டும். ★

## மாலதி நினைவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எழுச்சி தினமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது.

கோப்பாய் சந்தியில் 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவாலயத்திலும் —

தென்மராட்சியில் சாவகச்சேரி சந்தியிலும் வடமராட்சியில் மாலு சந்தியிலும் அமைந்துள்ள மாலதியின் உருவப் படங்களுக்கும் இன்று காலை 9 மணிக்கு ஈகைச் சுடரேற்றி மரைஞ்சலி செலுத்தப்படும்.

தொடர்ந்து அவ்விடங்களில் நினைவுரைகளும் இடம்பெறும்.

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை ஒட்டி இன்று பல வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தனியார், கூட்டுறவு அலுவலகங்கள், மகளிர் மன்றங்கள், பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் என்பவற்றில் மாலதியின் உருவப்படங்களுக்கு வீரவணக்கம் செலுத்துமாறு [illegible] அமைப்பு கேட்டுள்ளது

[ஐ 3]

## காணாமல்போன..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

சடலமாக மீட்கப்பட்ட — மூன்று பிள்ளைகளின் தந்தையான — கிறிஸ்தோபர் பீற்றர் ஜெயசீலனின் (வயது 30) தொண்டைக் குழியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது.

மற்றைய மீனவரான — இரண்டுபிள்ளைகளின் தந்தையான — சண்முகம் நடராசாவின் (வயது 30) சடலத்தில் நெஞ்சின் நடுப்பகுதியில் சூட்டுக் காயம்காணப்பட்டது.

இவர்களுடன் ஒரே படகில் சென்ற பற்றிக்ஸ் தம்பிநாயகம் ஜோயின்ஸ் (வயது 25) என்பவர் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இந்த மூவரும் சென்ற படகு மீன்பிடி வலைகளுடன் கடலில் அநாதரவாகக் காணப்பட்டபோது நேற்று முன்தினம் ஏனைய மீனவர்களால் மீட்கப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை —

கடந்த சனியன்றுக்குப் பின் காணாமல் போனதாகக் கூறப்பட்ட மற்றைய ஏழு மீனவர்களில் மூவர் தமது படகுடன் நேற்று கரை வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எஞ்சிய நான்கு மீனவர்களும் பூநகரி — பாலாவிக் கரையில் தமது படகுடன் ஒதுங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

(உ-13-15-51)

## தணிக்கை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

கடந்த 19 நாள்களாக அமுலில் உள்ள செய்தித் தணிக்கை அடிப்படை மனித உரிமையை மீறிய செயல் என்று ஐ.தே.க பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-3)

## சிமெந்தும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுத்தப்பட்டு கணக்குக் காட்டப்பட்டுள்ளது.

அந்தோ சிமெந்து, தார், மண்ணெண்ணெய், டீசல் என்பனவும் உணவுப் பொருள்களாகக் கருதப்பட்டு அந்த அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன!

பொய் சொல்ல நினைத்தால் இப்படியுமா பொய் சொல்வது? (அ-8)

## புத்தூர்--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்பது பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும், ஒருவர் காயமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

## நவம்பர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டுள்ளது.

போலியோ தடுப்பு தின வேலைகள், போரின் காரணமாக வடக்கு — கிழக்கில் பாதிக்கப்படாமல் இருக்கும் பொருட்டு இப்பகுதியில் அன்றைய தினம் உத்தியோகப் பற்றற்ற ரீதியில் போர் நிறுத்தம் செய்யுமாறு இரு தரப்புகளிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போலியோ தடுப்பு இயக்கத்தை றோட்டறிக் கழகத்துடன் இணைந்து யுனிசெவ் உலக சுகாதார நிறுவனம் ஆகியன சுகாதாரத் திணைக்களத்தினூடாக முன்னின்று நடத்துகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த யுனிசெவ் பிரதிநிதி திருமதி பிரீற்றா ஒவ்ட்பேக் ஊடாக முதலாவது போலியோ தடுப்பு தினமான நவம்பர் நான்காம் திகதியன்று உத்தியோகப் பற்றற்ற முறையில் போர் நிறுத்தம் செய்யக் கோரும் விண்ணப்பம் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இது குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இப்போது பரிசீலனை செய்து வருவதாகத் தெரிய வந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் உதவியாளர் தேவை

யாழ். பல்கலைக்கழக குழந்தை மருத்துவப் பிரிவுக்கு
பெண் உதவியாளர் தேவை

தகைமைகள்:-

கல்விப் பொதுத் தராதர
உயர்தரம் [உயிரியல்]

வயது: 20 — 30

உரிய சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளுடன்
31-10-95 க்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய விலாசம்:

யாழ். பல்கலைக்கழக குழந்தை மருத்துவப் பிரிவு
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

[8659]

# பிரசவித்த ஆண் சிசுவை உயிருடன் புதைத்த தாய்!

பெற்ற தாயே தனக்குப் பிறந்த ஆண் குழந்தையைக் கொன்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று நேற்றுப் பிற்பகல் யாழ். பொம்மைவெளியில் இடம்பெற்றிருக்கின்றது.

இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்த ஆண் சிசுவின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் காவல்துறையால் ஒப்படைக்கப்பட்டது.

இச்சிசுவை நேற்று பிரசவித்த கையோடு அதனைக் கொன்றதாகக் கூறப்படும் 28 வயது தாயும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இரண்டு குழந்தைகளைப் பெற்றுள்ள இப் பெண்மணி உரும்பிராயில் இருந்து இடம்பெயர்ந்து வந்து பொம்மைவெளியில் வசித்து வந்தார்.

பாழடைந்த வீடு ஒன்றுக்குச் சென்று இக் குழந்தையைப் பெற்ற அவர் பின்னர் அதனைப் அந்த வீட்டின் அடுப்பங்கரையில் உயிருடன் புதைத்ததாகக் கூறப்பட்டது.

வாயினுள் மண் அடைக்கப்பட்ட நிலையில் இணறிக் கொண்டிருந்த பிரஸ்தாப சிசு காவல்துறையினரின் உதவியுடன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளை மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-1315)

## பிரிட்டிஷ் அமைச்சர் விஜயம்

கொழும்பில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ள இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் துணை அமைச்சர் யோனி ஹம்லி இன்று வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

வடக்கின் எல்லைப் பிரதேசங்களுக்கும் செல்லும் இவர் வடக்கில் இருந்து வரும் பொதுமக்களுடனும், படையினருடனும் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-3]

## வீடு பார்க்க சென்றோர் சிக்கினர்?

நேற்று முன்தினம் புத்தூர் கிழக்குப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற இருவர் படையினரிடம் சிக்கியதாகத் தெரியவருகிறது.

புத்தூர் கிழக்கு குமர குருபரன் ச.ச. நிலையத்துக்கு அருகே உள்ள தமது வீடுகளைப் பார்த்துவரச் சென்ற சுந்தரலிங்கம் (வயது 40), பாப்பா (வயது 35) ஆகிய இருவருமே படையினரிடம் சிக்கினர் என்று அவர்களுடன் கூடச் சென்று தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்.

திடீரென நெருங்கி வந்த இராணுவத்தினர் அவர்கள் இருவரையும் கைதட்டி அழைத்ததாகவும் தப்பி வந்தவர்கள் தெரிவித்தனர்.

### மட்டக்களப்பில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இத்தாக்குதலை அடுத்து 19 ஆம் கட்டை விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து மூன்று பவள் கவசவாகனங்கள் சகிதம் உதவிக்கு வந்த விசேட அதிரடிப்படையினரையும் விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

சுமார் 20 நிமிடம் நீடித்த அத்தாக்குதலில் ஒரு பவள் கவசவாகனம் தகர்த்து அழிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மகாஓயாவுக்குக் கிழக்கே 27 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புளுக்குனாவ என்ற இடத்திலேயே கால்நடையாக ரோந்து சென்ற அதிரடிப்படையினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இத்தாக்குதலில் எட்டுப் படையினர் உயிரிழந்ததாகவும், ஏழு பேர் காயமுற்றதாகவும் கொழும்பில் அறிவிக்கப்பட்டது. ஆனால் விஷேட அதிரடிப்படையினர் [illegible] வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [illegible]

# உணவில் நஞ்சு 15 பொலீஸார் மயக்கம்

கொழும்பு, ஒக். 10

கந்தளாய் இந்துலத்துவ பொலீஸ்காவலரணில் கடமையில் இருந்த 15 பொலீஸார் உணவில் நஞ்சு கலந்ததால் மயக்கமுற்ற நிலையில் கந்தளாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது. (உ-3)

காரைநகர்

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வரையறுள்ளது]

374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## விசேட பொதுக் கூட்ட அறிவித்தல்

மேற்படி கூட்டம் சங்கத் தலைவர் திரு. சோ. விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் 15-10-95 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு வட்டுக்கோட்டை மாவடியில் உள்ள காரைநகர் யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இச்சங்கத்தின் பொதுச் சபை பிரதிநிதிகளால் தரப்பட்ட முகவரிக்கு நிகழ்ச்சி நிரல் கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாத பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திலுள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நிகழ்ச்சி நிரல் கடிதத்தை பெற்றுக்கொள்ளலாம்.

க. நடராசா
செயலாளர்

09-10-95. [சி-2444]

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா தாமோதரம்பிள்ளை

சரசாலை வடக்கு, சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட தம்பையா தாமோதரம்பிள்ளை அவர்கள் (சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை அன்சன்ஸ், இரசம் அரிசி ஆலை, இரசம் விற்பனை நிலையம் ஆகியவற்றின் ஸ்தாபகர்) 07-10-1995 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், பஞ்சாட்சரம், சந்திரகுமார், நவனகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சர்வேஸ்வரி, சிவரூபி, மதிவதனி ஆகியோரின் மாமனாரும், வைத்திலிங்கம், இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா, மகேஸ்வரி, இராஜதுரை [ஜேர்மனி], ஆகியோரின் மைத்துனரும், சிவபாலசுந்தரம், சிவகாந்தன் ஆகியோரின் சிறிய தகப்பனாரும், சிவநேசன் [கனடா], சிவசங்கா, சிவசீலன், சிவதாசன் [கனடா], சிவராதிகா [சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி] ஆகியோரின் பெரிய தகப்பனாரும், ஷாலினி, பிரபாலினி, ஹபீசன், தேனுஷா, சனோஜா, கலாஸ்கர், விமாகி, சுஹாசன், சாமினா, விபின்னா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10-10-95 அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் கொம்பி குளம் மயானத்திற்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
குடும்பத்தினர்.

சரசாலை வடக்கு. [38928]

## தாமோதரம்பிள்ளை அகிலேஸ்வரன்

(நியுலங்கா ஒலி அமைப்பாளரும் கன்னாகம் விக்நேஸ்வரோதயக் கல்லூரி அலுவலக உதவியாளரும்)

மல்லாகம் ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும், தற்போது செல்வராசா வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அகிலேஸ்வரன் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை (விதானையார்) தம்பதிகளின் அன்பு மகனும், அகிலேஸ்வரி, சிவசம்பு [உதவிக் கல்வி பணிப்பாளர், ஒட்டிசுட்டான்] கமலாதேவி, விமலாதேவி (ஆசிரியை, விசாலாட்சி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரசரத்தினம் (இளைப்பாறிய லிகிதர்), சதானந்தன் (உதவி நிலஅளவையாளர், திருகோணமலை) சர்வானந்தா (பிரதம லிகிதர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை), சந்திரஞானம் [உதவி திட்டப்பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, முல்லைத்தீவு] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
சு. சர்வானந்தா
[மைத்துனர்]

செல்வராசா வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [38937]

## கதிரவேலு மதியூகன்

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு மதியூகன் கனடாவில் 06-10-1995 அன்று அகால மரணமானார்.

அன்னார் கதிரவேலு (ஓய்வுபெற்ற சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்) - நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், மதிவதனி (ஆசிரியர், யா/ விக்நேஸ்வரோதயக் கல்லூரி), வாகீசன் (கனடா), வாசுகி (இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரி மாணவி - வவுனியா), கௌரி, கல்யாணி, காயத்திரி, தட்சாயினி (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி நா. கதிரவேலு
(தாய்)

"வாசுகி வாசம்"
சண்டிலிப்பாய். [illegible]

# மரண அறிவித்தல்கள்

## J. N. PONNIAH

(செல்வதி பாலர் பாடசாலை ஸ்தாபகர்)

காவலூரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயப் பங்கை வசிப்பிடமாகவும் கொண்ட J. N. பொன்னையா 9-10-95 இல் காலமாகிவிட்டார்.

இவர் சபீனம்மாவின் அன்புக் கணவரும், P. S. திருச்செல்வம் (நீதிமன்ற குடும்ப ஆலோசகர்), காலஞ்சென்ற P. X. S. குலசிங்கம் (ஆசிரியர்), திருமதி தவமணி மரியதாஸ், திருமதி P. F. பூமணி (ஆசிரியை), திருமதி செல்வமணி போகரட்ணம் (ஆசிரியை), திருமதி இராசயோகமணி சிவலிங்கம் (பிரான்ஸ்), திருமதி பவளமணி ஜெயகுமார் (பிரதம லிகிதர் / செயலாளர் நல்லூர் M. P. C. S.), J. N. P. பாக்கியராசா (கிராம சேவை அலுவலர்), திருமதி லங்காதேவி சண்முகநாதன் (லங்கா சிமெண்ற் K. K. S.), செல்வி நிர்த்தமணி (ஆசிரியை) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-10-95 இன்று பி.ப. 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் (திருநெல்வேலிச் சந்தி) நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை அன்னாரது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் சார்பாக சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
P. S. திருச்செல்வம் (மகன்)
(யாழ் / விவாகப்பதிவாளர், செயலர் வ. மா. ஓய்வூதியர் சம்மேளனம் நல்லூர்.)

J. N. P. பாக்கியராசா (மகன்)
(கிராம சேவை அலுவலர், பாஷையூர்),
திருநெல்வேலி. (38935)

## திருமதி இரத்தினம்மா வைத்தீஸ்வர ஐயர்

உடுவில் கற்பொக்கணையைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்தீஸ்வர ஐயரின் மனைவி இரத்தினம்மா 09-10-1995 திங்கட்கிழமை அதிகாலை 12-30 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கா. தெய்வநாயகி அம்மா, யோகீஸ்வர சர்மா (இளைப்பாறிய அதிபர், உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), பிரணதார்த்திஹரன் (அவுஸ்திரேலியா), திருமதி வை. லோகேஸ்வரி (வவுனியா), திருமதி சி. மகேஸ்வரி, பஞ்சநாதீஸ்வரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-10-1995 இல் உடுவிலில் நடைபெற்றன.

தகவல்;
வை. யோகீஸ்வர சர்மா.
(மகன்)

உடுவில். (சி-2440)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10-10-95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org